**மொரவெவ பிரதேச சபை - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

மொரவெவ பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் மொரவெவ பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை,

பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்த பயன்படுத்தியுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் உள்ளடக்கப்பட்டிருந்தது.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**
**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019,2020,2021 ஆண்டுகளிற்காக மீளாய்வாண்டினுள் கிடைத்த ரூபா 323,620 ஆன முத்திரைக் கட்டணம் மீளாய்வாண்டு வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இந்த தவறுகளை 2023 இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதென. | சரியாக கணக்குகளை தயாரிக்க வேண்டும். |
| (ஆ) | கடந்த ஆண்டின் போது ஸ்தாபிக்கப்பட்ட பாதுகாப்பு கெமரா தொகுதிற்காக கிழக்கு உள்ளூராட்சி திணைக்களத்திலிருந்து கிடைத்த ரூபா 300,000 ஆன தொகை நடைமுறை ஆண்டின் வருமானமாக கணக்கீடு செய்திருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | கடந்த ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட 03 ஒப்பந்தங்கள் மற்றும் நிலையான சொத்துக்கள் 05 கொள்வனவு செய்வதற்காக ரூபா 2,570,368 ஆன தொகை ஆண்டில் வருமானமாகவும், ஒப்பந்ததாரருக்கு மற்றும் வழங்குநரிற்கு செலுத்திய | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | தொகையை ஆண்டின் செலவினமாக கணக்கீடு செய்திருந்தது. | | |
| (ஈ) | 02 நீர் கருத்திட்டங்களிற்காக 265 நுகர்வோர்களிலிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 567,572 ஆன தொகை நிலுவை வருமானமாக கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (உ) | மீளாய்வாணடினுள் பொது நிருவாக உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபை மற்றும் உள்ளூராட்ச்சி அமைச்சின் கிடைத்திருந்த ரூபா 14,000,000 பெறுமதியான நீர் பவுசரை கணக்கீடு செய்திருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஊ) | மீளாய்வாண்டிற்காக கிடைக்க வேண்டிய ரூபா 50,465 ஆன நிலையான வைப்பு வட்டியை கணக்கீடு செய்திருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (எ) | மீளாய்வாண்டிற்கான கணக்காய்வு கட்டணத்திற்காக நிதி ஏற்பாடு வழங்கிருக்காததுடன் 2020,2021, ஆண்டுகளிற்காக முறையே ரூபா 13,800 மற்றும் ரூபா 24,600 ஆன கணக்காய்வு கட்டணமாக ஒதுக்கமும் செய்திருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஏ) | கூட்டுத்தொகை ரூபா 197,340 ஆன நன்கொடையாக கிடைத்த பொருட்களின் பெறுமதியை கணகீடு செய்திருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

### 1.6.2 தொங்கள் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2011 ஆண்டு முதல் முன் கொண்டு வரப்படும் தொங்கள் கணக்கின் ரூபா 7,864,759 ஆன மீதியை தீர்த்திருக்கவில்லை. | 2011 ஆண்டு இறுதிக் கணக்கில் இந்த மீதி ஆரம்பமாக குறிப்பிடப்படுவதுடன் அங்கிருந்து இது வரை ஒவ்வொறு இறுதிக் கணக்குகளிலும குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்குரிய தகவல்கள் இல்லாத காரணத்தால் இதனை தீர்க்க முடியாதுள்ளது. விரைவில் தீர்க்க நடவடிக்கை எடுபதென. | தொங்கள் கணக்கை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் |

**1.6.3 கணக்காய்விற்கான ஆவண சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளப்படியான ரூபா 106,558,098 பெறுமதியான 06 கணக்கு மீதிகளின், உறுதி, நிலையான சொத்துக்கள் பதிவேடு, காலப் பகுப்பாய்வு, முற்பண பதிவேடு மற்றும் இருப்பு கணிப்பீடு செய்யும் பதிவேடுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்காத காரணத்தால் திருப்திகரமாக பரீட்சிக்க முடியாமல் போனது. | பதிவேடுகளை தயாரிக்கும் பிரச்சினைகள் காணப்படுவதென மற்றும் எதிர்காலத்தில் சரி செய்வதென. | கணக்கு விடயங்களிறகான சரியான தகவலகள் உள்ளிடப்பட்ட பதிவேடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின | | | |
| (i) | 24 ஆந் பிரிவு | சபைக்கு சொந்தமான அனைத்து பாதைகளையும் இனங்கண்டு இன்வென்ட்றியில் உட்படுத்த அல்லது வர்த்தமானியில் பிரசுரிக்கவும் நடவடிக்கைத்திருக்கவில்லை. | பாதைகளை இன்வென்றியில் உட்படுத்தியுள்ளதுடன் நாளாதுவரையாக்கப்படவில்லை. மீண்டுமொறு முறை அனைத்து பாதைகளையும் அளவையிடும் நடவடிக்கையில் ஈடுவடுவதுடன் அந்த நடவடிக்கை பூர்த்தியானவுடன் வர்த்தமானியில் பிரசுரிக்க நடவக்கை எடுப்பதென. | காணப்படும் அனைத்து பாதைகளையும் இன்வென்றியில் உட்படுத்தி வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 134 ஆந் பிரிவு | சபையின் அதிகார பிரதேசத்தினுள் அமைந்துள்ள முன்னேற்றிய பிரதேசங்கள் குறிப்பாக இனங்கண்டு வீதவரியும் | இனங்கண்ட சில பிரதேசங்களிற்கு புதிதாக வீதவரி விதிக்க தேவையான நடவடிக்கை எடுப்பதென. | பிரதேச சபை சட்டத்தின் 134 பிரிவின் பிரகாரம் நடவக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வரியும் விதிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஆ) | 2018 இன் 19 ஆந் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(2) பிரிவு | கணக்குகளுடன் சமர்ப்பிக்க வேண்டிய செயலாற்றுகை அறிக்கை கணக்கீட்டு உத்தியோகத்தரினால் சமர்ப்பித்திருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன். எதிர்வரும் கணக்கு கூற்றுகளுடன் சமர்ப்பிக்கப்படுவதென. | 2018 இன் 19 ஆந் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 1989 ஏப்ரல் 17 ஆந் திகதிய 554/5 ஆந் இலக்க அதி விஷேட வர்த்தமானி பத்திரத்தில் பிரசுரிக்கப்பட்ட 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | | |
| (i) | 193 ஆந் விதி | பாதீடு மற்றும் மீள்நிரப்பு அங்கீகார செலவினத்துடன் செலவின விடயங்களின் உள்ளவாறான செலவினத்தை இணக்கஞ் செய்து மிகை மற்றும் பற்றாக்குறை தொடர்பான காரணங்கள் காட்டப்படும் கூற்றுக்களி கணக்குகளுடன் சமர்ப்பித்திருக்கவில்லை. | -மேற்படி- | பிரதேச சபை விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 218 ஆந் விதி | கிரயம் ரூபா 60,508,564 ஆன காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக கணிப்பீடு செய்திருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன். 2023 ஆண்டு முதல் வருடாந்தம் கணிப்பீடு செய்ய நடவடிக்கை எடுப்பதென. | -மேற்படி- |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணம் | | | |
| | நிதிப்பிமாணம் 1645(ஆ) மற்றும் 1646 | 07 வாகனங்களில் ஓட்டக் குறிப்பு மற்றும் மாதாந்த பொழிப்பு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில் லை. | ஏற்றுக்கொள்கிறேன். 2023 ஆண்டு முதல் மாதாந்த அறிக்கை சமர்ப்பித்துள்ளதென. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 280,387 ஆக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 109,478 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| வாடகை | 5,100 | 2,882 | 3,193 | 469 | 1,330 | 2,421 | 2,041 | 780 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 250 | 1,115 | 1,128 | - | 250 | 132 | 132 | 13 |
| ஏனைய வருமானம் | - | - | - | - | 5,000 | 3,712 | 3,188 | 523 |
| | 5,350 | 3,997 | 4,321 | 469 | 6,580 | 6,265 | 5,361 | 1,316 |

### .2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றுகை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வாடகை** | | |
| மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 181,038 ஆன கடையறை வாடகை நிலுவையாக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 58,336 முன்னைய ஆண்டுகளிற்காக அறவிட வேண்டியதாக காணப்பட்டது. | குறித்த வாடகையாளரினால் நிலுவைத் தொகையை செலுத்த உடன்பட்டுள்ளதுடன் அவ்வாறு செய்யவில்லை எனில் சட்ட நடவடிக்கை எடுக்க நடவடிக்கை எடுப்பதென. | உடன்படிக்கை பிரகாரம் நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(ஆ) நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்** | | |
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,776,885 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 84,500 ஆனது. | முறையாக கோரியுள்ள போதும் உரிய காலத்தில் பணம் விடிவிக்காததனால் நிலவை வருமானமாக காணப்படுவதுடன் எதிர்காலத்தில் சரியாக நடவடிக்கை எடுக்க திட்டமிடுவததென. | நிலுவை வருமானத்தை அழைப்பித்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்ராட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆண்டின் போது சபையின் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் வழங்கியிருந்த ரூபா 1,826,485 ஆன முற்பணம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை | இந்த முற்பணம் தொடர்பாக எவ்வித தகவல்களையும் அறிந்து கொள்ள முடியாததால் இதுவரை தீர்ப்பது கடினமாகியுள்ளது. பழைய கோவைகளை பரிசோதனை செய்து கொண்டிருப்பதுடன் இந்த ஆண்டினுள் பொருத்தமான நடவடிக்கை எடுக்க முடியுமாகுமென. | பரிசோதனை ஒன்று மேற்கொண்டு முற்பணத் தொகையை தீர்த்துக் கொள்ள வேண்டும் |

### 3.2 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான ரூபா 16,695,000 பெருமதியான JCB இயந்திரமொன்று தற்போது 05 வருட அளவு காலமாக் செயற்படாது காணப்பட்டது. | இந்த வாகனத்தை திருத்துவதற்கு பொருத்தமான வழங்கினர் ஒருவர் இல்லாததால் திருத்துவதற்கு முடியாதுள்ளதுடன் திருத்துவதற்காக செலவாக முடியுமான அதிக தொகையை செலவிட சபையில் நிதி ஏற்பாடு இல்லாதமையும் பிரச்சினையாகவுள்ளது. | சொத்தக்கள் முகாமைத்துவத்தை முறையாக்க வேண்டும். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அங்கிகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை கவனிக்கும் போது 07 பதவிகளில் 08 வெற்றிடங்கள் காணப்படுவதாக வெளிப்படுத்தப்பட்டது. | குறித்த வெற்றிடங்களை பூர்த்தி செய்து தருமாறு மேல் உத்தியோகத்தரிற்கு பல சந்தர்பங்களில் கோரியுள்ளதுடன் புதிய ஆட்சேர்ப்பு இடைநிறுத்தப்பட்டுள்ளதால் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தடை ஏற்பட்டுள்ளது. தற்போது தற்காலிக அடிப்படையில் வருமான பரிசோதகர் உத்தியோகத்தர் ஒருவர் ஒரு வாரத்திற்கு 2 நாட்கள் இணைக்கப்பட்டுள்ளதென. | வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கிழக்கு மாகாண நிதி சுற்றறிக்கை PT/03/2021 பிரகாரம் பிணை வைக்க வேண்டிய 11 அலுவலர்களினால் போதிய வாறு பிணை வைத்திருக்கவில்லை. | விரைவில் குறித்த அலுவலர்களினால் பிணை வைக்க நடவடிக்கை எடுப்பதென. | நிதிப்பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | பல வருடங்களிற்கு முன்னர் 04 அலுவலர்களுக்கு வழங்கியிருந்த ரூபா 100,146 ஆன கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறித்த நபர்களின் தகவல்களை சேர்த்துக் கொண்டு இருப்பதுடன் அந்த கடன் மீதிகளை அறவிடவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதென. | -மேற்படி- |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபையினால் 2022 ஆண்டிற்காக வருடாந்த செயல் நடவடிக்கை திட்டமொன்றை தயாரித்திருக்காததுடன் மீளாய்வாண்டிற்குரிய வரவு செலவுத் திட்டத்தின் அடிப்படையில் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டுகளில் இருந்து செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரிக்க நடவடிக்கை செய்யப்பட்டுள்ளதென. | வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரிக்க வேண்டும். |

**4.2 உள்ளக கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்ளக கணக்காய்வு அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதும் முறையான விதத்தில் அறிக்கைகளை பேணி இருக்கவில்லை. | 2023 ஆண்டு முதல் முறையாக உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதென. | உள்ளக கணக்காய்வினை முறையாக்க வேண்டும். |

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலக்கம் DNA/2019(1) கொண்ட சுற்றறிக்கை பிரகாரம் 2022 திசெம்பர் 31 திகதியின் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் 01 மாத்திரம் அதாவது 2022 செப்டம்பர் 22 திகதி நடாத்தப்பட்டிருந்தது. | 2023 ஆண்டு முதல் குறித்த சுற்றறிக்கையின் அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதென. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த வரவு செலவுத் திட்டத்தின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவுகள் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுடன் ஒப்பிடுகையில் 05 வருமான விடயங்களில் 2.49 சதவீதம் முதல் 447.56 சதவீதம் வரையும் 05 செலவு விடயங்களில் 12.12 சதவீதம் முதல் 54.71 சதவீதம் வரை விலகல்கள் அவதானிக்கப்பட்டதால் வரவு செலவுத் திட்டம் ஆக்கபூர்வ கட்டுப்பாட்டு சாதனமொன்றாக பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | மதிப்பிடப்பட்ட வருமானம் கிடைக்காததால் வருமான விடயங்கள் மற்றும் செலவு விடயங்களில் விலகல்கள் ஏற்பட்டதென. | வரவு செலவுத் திட்டத்தை நடைமுறை சாத்தியமாக தயாரிக்க வேண்டும். |

## 4.5 நிலைபேறான அபிபிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்திலுள்ள நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் இலக்குககள் மற்றும் குறித்த பிரமாணங்களை இனங்காண்பது தொடர்பாக போதிய தெளிவொன்றை மீளாய்வாண்டிலும் பெற்றுக் கொண்டிருக்காத போதும் நிலைபேறான அபிவிருத்தி செயலாற்றுகை சுட்டி இரண்டினை மாத்திரம் அடையப்பெற்றிருந்தது. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் அனைத்தையும் அடைந்து கொள்ள திட்டமிட்டு வருவதென. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் குறித்த பிரமாணங்களை அடைந்து கொள்ள வேண்டும். |